**செய்தி வெளியீடு எண்:211** **நாள்: 18.04.2017**

**செய்தி வெளியீடு**

ஆசிரியர் தேர்வு வாரியம் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர் பணியிடங்களுக்கான போட்டித் தேர்வுகளை நடத்தி ஆசிரியர்களை தேர்வு செய்யும் பணியினை தொடர்ந்து செய்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் தேவைப்படும் ஆசிரியர்களை தேர்வு செய்யும் பணியினை செய்யும் பொருட்டு அவ்வப்பொழுது அறிவிக்கைகளை வெளியிட்டு வருகிறது.

பணி நாடுநர்கள் அவர்களது விருப்பத்திற்கேற்ப போட்டித் தேர்வினை எதிர்கொள்ளவும் அவற்றுக்கு ஏற்ப தங்களை முழுமையாகத் தயார் செய்து கொள்ளும் வகையில் தற்போது ஆசிரியர் தேர்வு வாரியத்தால் **2017**ம் ஆண்டில் நடத்தப்படும் பல்வேறு ஆசிரியர் மற்றும் ஆசிரியர் சார்ந்த **6390** பணியிடங்களுக்கான தேர்வுகளின் விவரங்கள் அடங்கிய ஆண்டு அட்டவணை **2017** –ஐ (Annual Planner 2017) **மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்** அவர்கள் வெளியிட்டார்கள்.

இனி வருங்காலங்களில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் அனைத்தும் **இணைய வழி (Online)** மூலமே விண்ணப்பிக்க உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தேர்வுகளுக்கு மட்டும் **கணினி வழித்தேர்வினை (Computer Based Test)** நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. உடன் திரு. த. உதயச்சந்திரன் இ.ஆ.ப., அரசுச் செயலாளர், பள்ளிக்கல்வித்துறை, திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., தலைவர், ஆசிரியர் தேர்வுவாரியம் ஆகியோர் உள்ளனர்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**

# TEACHERS RECRUITMENT BOARD – ANNUAL PLANNER 2017

## PENDING RESULTS

| Sl.No. | Name of Recruitment /Post | (No. of Vacancies) | Notification | Date of Examination | Result |
|---|---|---|---|---|---|
| **1.** | Teacher Eligibility Test Paper I | -- | 24.02.2017 | 29.04.2017 | Jul 2017 |
| **2.** | Teacher Eligibility Test Paper II | -- | 24.02.2017 | 30.04.2017 | Jul 2017 |

## TO BE NOTIFIED

| Sl.No. | Name of Recruitment /Post | (No. of Vacancies) | Notification | Date of Examination | Result |
|---|---|---|---|---|---|
| **3.** | Post Graduate Assistants | 2119 | 2nd Week of May 2017 | 02.07.2017 | Aug 2017 |
| **4.** | Lecturers in Government Polytechnics | 1137 | 2nd Week of Jun 2017 | 13.08.2017 | Oct 2017 |
| **5.** | Special Teachers | 1188 | 3rd Week of Jul 2017 | 19.08.2017 | Nov 2017 |
| **6.** | Agriculture Instructors | 25 | 3rd Week of Jul 2017 | 20.08.2017 | Nov 2017 |
| **7.** | Assistant Professor for Government Arts and Science Colleges | 1883 | 4th Week of Jul 2017 | Interview – 1st Week of Sep 2017 | Oct 2017 |
| **8.** | Assistant Elementary Educational Officer | 38 | 2nd Week of Aug 2017 | 30.09.2017 | Dec 2017 |
| | **Total** | **6390** | | | |